# தொழில் உறவுகள் அமைச்சு

# தொழில் திணைக்களம்

## தொழில் திணைக்களத்தில்,மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர்- தொழில நுட்பச் சேவை வகையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021

தொழில் அமைச்சின் கீழுள்ள தொழில் திணைக்களத்தில், மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில நுட்பச் சேவை வகையின் பதவிகளுக்கு 2021.03.31 இல் உள்ள வெற்றிடங்களுக்குப் பொதுச் சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, திறந்த அடிப்படையில், 2021.08.13 என்னும் முடிவுத் திகதியில், இவ்வறிவித்தலின் பந்தி 3.0 இல் குறிப்பிட்டவாறுதகைமைகளைக்கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.0 பதவிகள் மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கை

| இலக்கம் | பதவியின் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | கைவிரலடையாளப் பரிசோதிக்கும் அலுவலர் | 3 |
| 2 | ஆராய்ச்சி உதவியாளர் | 3 |
| 3 | கட்டிடப் பரிசோதகர் | 3 |
| 4 | படவரைஞர் | 2 |
| 5 | தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) | 1 |
| 6 | தொழில்நுட்ப அலுவலர் (எலக்ரிக்கல்) | 1 |

1.1 பதவிக்கான கடமையின் தன்மை–நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துமுடையதுமாகும் ( எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் ஒய்வூதிய திட்டம் தொடர்பில் எடுக்கப்படும் கொள்கை முடிபுகளுக்கு உட்படும்)

1.2 பதவியின் கடமைகளின் தன்மைகள்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியின் பெயர் | கடமை |
|---|---|---|
| 1. | கைவிரலடையாளம் பரிசோதிக்கும் அலுவலர் | உரிய பிரிவின் வேண்டுகோளின்படி,ஊழியர் சேமலாப நிதி நன்மைக்கான விண்ணப்பங்களில் கோரப்படும் கூடிய பெறுமதிகளுக்கு, அப்படிவங்களிலும், ‘ஏ’ ,‘பீ’,‘எச்‘ படிவங்களிலும் காணப்படும் கைவிரலடையாளங்களை, உரிய ஆளின் ஆள் அடையாளத்தை உறுதிப் படுத்துவதில் சிக்கல் உள்ளபோது பரிசோதித்தல். கைவிரலடையாளங்களைப் |

| | | |
|---|---|---|
| | | பரிசோதித்தலில் மற்றவர்களுக்குப் பயிற்சியளித்தல். திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |
| 2. | ஆராய்ச்சி உதவியாளர் | வேலைத்தலங்களில் தொழில்கள் தொடர்பான சுற்றுச்சூழல் அளவைகள், உயிரியல் அளவைகள் மற்றும் விஞ்ஞான ரீதியான அளவைகள் ஆகியவற்றை எடுப்பதில் ஆராய்ச்சி அலுவலர் (தொழிற் சுகாதாரம்), சிரேட்ட ஆராய்ச்சி அலுவலர் (தொழிற் சுகாதாரம்), பிரதி ஆணையாளர் (தொழிற் சுகாதாரம்) ஆகியோருக்கு உதவுதல். (தொழிற் சுகாதாரம்), சூழல்களுக்கான அளவைகளை எடுப்பதற்கான உபகரணங்களின் சிறந்த செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாயிருத்தல். அவ்வுபகரணங்களின் பாவனையையும் பேணுகையையும் கவனித்தல். தொழிற்தலச் சூழலிலுள்ள இரசாயன அனர்த்தங்களின் தன்மையைத் தீர்மானிப்பதற்கான வளி மாதிரிகளைச் சேகரிக்கும் செயற்பாடுகளை ஒழுங்குசெய்தலும், அவ்வாறு சேகரிக்கப்படும் மாதிரிகளைப் பரிசோதிப்பதற்குத் தயார் செய்தல். ஆய்வுகூட உபகரணங்களைப் பேணுதலும், அவற்றை முறையாகப் பயன்படுத்துவதில் ஆராய்ச்சி அலுவலர்களுக்கு உதவுதல்.வேலைத்தலங்களில் தொழில் பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வுகளை மேற்கொள்ளும்போது,ஊழியர்களின் உடல்ரீதியான அளவீடுகளை எடுத்தலும்,அவற்றை ஆராய்தலும். வேலைத்தலமொன்றில் ஊழியர்களின் இரைச்சலைத் தாங்கும் அளவுகள் மற்றும் அவர்களது சுவாச நிலைமை பற்றிய பரிசோதனைகளில் ஆராய்ச்சி அலுவலர்களுக்கு அவசியமானபோது உதவுதல். திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |

| | | |
|---|---|---|
| 3 | கட்டிடப் பரிசோதகர் | தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான தொழிற் செயலகக் கட்டிடத்தின், பிராந்திய தொழில் அலுவலகங்களின் புதுப்பித்தல் செயற்பாடுகள் மற்றும் புதிய கட்டிட வேலைகளின் மேற்பார்வை. வேலைகளுக்கான மதிப்பீடுகளை மேற்கொள்ளல். கட்டிட ஒப்பந்தக்காரர்களின் வேலைகளைப் பரிசோதித்தல். கட்டிடப் பொருட்களின் அளவுப் பட்டியல்களைத் தயாரித்தல். தொழில்நுட்ப அலுவலர்களின் வேலைகளை மேற்பார்வை செய்தல். திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |
| 4 | படவரைஞர் | பொறியியலாளரால் தயாரிக்கப்படும் திட்டங்களுக்கு படங்கள் வரைதல். திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |
| 5 | தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) | தொழில் திணைக்களத்திற்குச் சொந்தமான தொழிற் செயலகக் கட்டிடத்தின், பிராந்திய தொழில் அலுவலகங்களின் புதுப்பித்தல் செயற்பாடுகள். புதியகட்டிடப் பணிகளை மேற்பார்வை செய்தல்,மதிப்பீடுகளைத் தயாரித்தல். கட்டிட ஒப்பந்தக்காரர்களின் வேலைகளைப் பரிசோதித்தல். கட்டிடப் பொருட்களின் அளவுப் பட்டியல்களைத் தயாரித்தல். தொழில்நுட்ப அலுவலர்களின் வேலைகளை மேற்பார்வை செய்தல். திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |
| 6 | தொழில் நுட்ப அலவலர்(எலக்ரிகல்) | புதியகம்பி இணைப்பு முறைமைகள் தொடர்பான மதிப்பீடுகளைத தயாரித்தல், வளிக் குளிராக்கிகளைப் பொருத்துதல், வளிக் குளிராக்கிகளைப் பராமரித்தல் மற்றும் சீர் செய்தல், மின்சுற்று முறைமைகளைப் பரி சோதித்தல், மேலுள்டளவற்றை நவீனமயப்படுத்துவதற்கான மதிப்பீடுகளைத் தயாரித்தல், மின் உற்பத்தியாக்கிகளை பரி சோதித்தல் மற்றும் மின்னியல் தொழில் நுட்பவியலாளருடன மின்னியல் |

| | | |
|---|---|---|
| | | உபகரணங்களை பரிசோதித்ததன் பின்னர் பிளைகளுக்கான அறிக்கைகளைத் தயாரித்தல்மற்றும் மின் உபகரணங்கள் சீர் செய்வதனைப் பரி சோதித்தல்,ஒலிபெருக்கி முறைமைகள் மற்றும் தொலை பேசிவலையமைப்பினைப் பரி சோதித்தல்வெளியிலுள்ள நிறுவனங்களால் செய்யப்படும் மின்னியல் வேலைகளைப் பரிசோதித்தல், மாவட்ட அலுவலகங்களின் பராமரிப்புக்கள் மற்றும் சீர்செய்தல்கள் வேலைகளை பரிசோதித்தல் மற்றும் திணைக்களத் தலைவரால் ஒப்படைக்கப்படும் வேறு கடமைகள். |

2.0 ஆட்சேர்ப்பு திட்டமுறை

2.1 மேற்படி பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு, பயிற்சிக்குரிய வகுப்பு (இரண்டு வருட பயிற்சிக்காலம்), பயிற்சிக்குரிய வகுப்பு (ஒரு வருட பயிற்சிக்காலம்),வகுப்பு III (நேரடி ஆட்சேர்ப்பு) ஆகிய 3 வகுப்புகளின் கீழ், விண்ணப்பதாரிகளின் தகைமைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வகுப்பிற்கும் உரிய தகைமைகள் பந்தி 3.0 இல் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பிக்கும் வகுப்பு விண்ணப்பதாரர்களால் விண்ணப்பப் படிவங்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

2.2 ஓர் எழுத்துப் பரீட்சை மற்றும் பொதுவான ஒரு நேர்முகப்பரீட்சை ஆகியவற்றின் அடிப்படையில்,முதலில் வகுப்பு ஐஐஐ (நேரடி ஆட்சேர்ப்பு) இற்கு ஆட்சேர்ப்பு நடைபெற்று,இரண்டாவதாக பயிற்சிக்குரிய வகுப்பிற்கும் (ஒரு வருட பயிற்சிக்காலம்), மூன்றாவதாக பயிற்சிக்குரிய வகுப்பிற்கு (இரண்டு வருட பயிற்சிக்காலம்) ஆகியவற்றுக்கும், பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படும்.

2.2.1 மேற்படி மூன்று தரங்களிலும், முதலில் தரம் III இற்கு நேரடியான ஆட்சேர்ப்பு இடம்பெறும். தகைமை பெறும் பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டு, பொதுவானதொரு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆட்சேர்ப்பின் எண்ணிக்கையானது,வகுப்பு III (நேரடி ஆட்சேர்ப்பு) இற்குவிண்ணப்பித்து எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளில்,அவர்கள் எழுத்துப் பரீட்சையில் பெறும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிலிருந்து தீர்மானிக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது.

2.2.2 வகுப்பு III இற்கு நேரடி ஆட்சேர்ப்பிற்குத் தகைமை பெறுவோரது எண்ணிக்கை போதுமானதாக இல்லாத பட்சத்தில்,மிகுதியான வெற்றிடங்கள், பயிற்சிக்குரிய வகுப்பிற்கு (ஒரு வருட பயிற்சிக்காலம்) விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளால் நிரப்பப்படும். இதில் தகைமை பெறும்

பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டு, பொதுவானதொரு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆட்சேர்ப்பின் எண்ணிக்கையானது, பயிற்சிக்குரிய வகுப்பிற்கு (ஒரு வருட பயிற்சிக்காலம்) விண்ணப்பித்து எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளில், அவர்கள் எழுத்துப் பரீட்சையில் பெறும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிலிருந்து தீர்மானிக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது.

2.2.3 மேற்கூறப்பட்ட 2.2.1 மற்றும் 2.2.2 ஆகியவற்றின்படி தகைமை பெறும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கைகள்போதுமானதாக இல்லாத பட்சத்தில்,மிகுதியான வெற்றிடங்கள், பயிற்சிக்குரிய வகுப்பிற்கு (இரண்டு வருட பயிற்சிக்காலம்) உரிய தகைமைகளைக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகளால் நிரப்பப்படும். இதில் தகைமை பெறும் பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டு, பொதுவானதொரு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஆட்சேர்ப்பின் எண்ணிக்கையானது, எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளில், அவர்கள் எழுத்துப் பரீட்சையில் பெறும் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கிலிருந்து தீர்மானிக்கப்பட எதிர்பார்க்கப்படுகிறது.

2.3 பொதுவான நேர்முகப் பரீட்சையானது, பொருத்தமான உடல் ரீதியான தகைமையையும் சான்றிதழ்களையும் பரீட்சிப்பதற்காக நடாத்தப்படும். இந்த பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு, புள்ளிகளேதும் வழங்கப்பட மாட்டாது.

3.0 தகைமைகள்:

ஒவ்வொரு வகுப்பிற்குமுரிய தகைமைகள் பின்வருமாறு.

3.1 கல்வி மற்றும் வாண்மைத்துவத் தகைமைகள்.

3.1.1 பயிற்சிக்குரிய வகுப்பு (இரண்டு வருட பயிற்சிக்காலம்)

(அ) கல்வித் தகைமைகள்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில், சிங்களம.∵.தமிழ்.∵.ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம் (தூய கணிதம் ∴ பிரயோக கணிதம் ∴ இணைந்த கணிதம்) ∴ உயிரியல் விஞ்ஞானம் (உயிரியல் ∴ தாவரவியல்), பௌதிகவியல், இரசாயனவியல் மற்றும் தொழில்நுட்பம் (உயிரியல் தொழில்நுட்பம், இயந்திரவியல் தொழில்நுட்பம், தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்) ஆகியவற்றில் 02 பாடங்களில் சித்தி.

3.1.2 பயிற்சிக்குரிய வகுப்பு (ஒரு வருட பயிற்சிக்காலம்)

(அ) கல்வித் தகைமைகள்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில், சிங்களம்.∵.தமிழ்.∵.ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம் (தூய கணிதம் ∴ பிரயோக கணிதம் ∴ இணைந்த கணிதம்) ∴ உயிரியல் விஞ்ஞானம் (உயிரியல் ∴ தாவரவியல்), பௌதிகவியல், இரசாயனவியல் ஆகியவற்றில் 02 பாடங்களில் சித்தி.

(ஆ) வாண்மைத்துவத் தகைமைகள்

i. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து,இப் பதவிக்குரிய துறையில் ஒரு பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து,தொழில்நுட்பத்திற்கான தேசிய சான்றிதழைக் கொண்டிருத்தல் (உ-ம்: தொழில்நுட்பத்திற்கான தேசிய சான்றிதழ்: சிவில்∴மின்னியல்∴இயந்திரவியல்).

அல்லது

ii. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து, படம்வரைதலில் ஒரு வருட முழுநேரப் பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து, உரிய சான்றிதழைக் கொண்டிருத்தல்.

அல்லது

iii. மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து, இப் பதவிக்குரிய துறையில் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து, உரிய சான்றிதழைக் கொண்டிருத்தல்.

அல்லது

iv. உயர் கல்வி அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்களுடனான,மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு ஒவ்வொரு விதத்திலும் சமமானதும்,மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதுமான வேறு ஏதாவது தொழில்நுட்பவியல் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

3.1.3 வகுப்பு III (நேரடி ஆட்சேர்ப்பு)

(அ) கல்வித் தகைமைகள்

க.பொ.த. (சா.த.) பரீட்சையில், சிங்களம்∴தமிழ்∴ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே தடவையில் கணிதம் (தூய கணிதம் ∴ பிரயோக கணிதம் ∴ இணைந்த கணிதம்) ∴ உயிரியல் விஞ்ஞானம் (உயிரியல் ∴ தாவரவியல்), பௌதிகவியல், இரசாயனவியல் ஆகியவற்றில் 02 பாடங்களில் சித்தி.

(ஆ) வாண்மைத்துவத் தகைமைகள்

பின்வரும் தகைமைகளுள் ஆகக்குறைந்தது ஒன்றையாவது பூர்த்தி செய்திருத்தல்.

I. மொரட்டுவ பல்கலைக்கழகத்தால் அல்லது அம்பாறை - ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்பட்ட தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா.

II. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பொறியியலில் தேசிய டிப்ளோமா.

அல்லது

III. கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா.

அல்லது

IV. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட தொழில்நுட்பவியல் டிப்ளோமா.

அல்லது

V. இலங்கை, பொறியியலாளர்கள் நிறுவகத்தால் நடாத்தப்பட்ட பொறியியல் பரீட்சையின் பகுதி ஐ ஐ வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல்.

அல்லது

VI. உரிய துறையில் தேசிய தொழிற்பயிற்சித் தகைமையின் (ஏஏஞ) மட்டம் 6 ஐப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

VII. உயர் கல்வி அமைச்சு மற்றும் ஏனைய நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்களுடனான, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்பவியல் தகைமைகளுக்கு ஒவ்வொரு விதத்திலும் சமமானதும், மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதுமான வேறு ஏதாவது தொழில்நுட்பவியல் தகைமைகளைக் கொண்டிருத்தல்.

3.2 உடற்றகைமைகள்

நாட்டின் எப்பாகத்திலும் வேலை செய்வதற்குத் தேவையான மற்றும் உரிய பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குரிய உடல் மற்றும் உளத்தகமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3.3 ஏனைய தகைமைகள்

(ი) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ை) சிறந்த குணநலன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ைை) ஏதேனும் மதமொன்றின் மதகுருவாக நிலைப்படுத்தப்பட்ட எவரும் இதற்குரிய பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதிபெற மாட்டார்.

(எ) விண்ணப்பங்களைக் கோருகின்ற அறிவித்தலில் குறித்துக்கூறப்படுகின்ற திகதியன்று, குறித்துக்கூறப்படும் வயதையும், மற்றைய தேவையான எல்லாத் தகைமைகளையும் ஒவ்வொரு விதத்திலும் திருப்திப்படுத்தினால் மாத்திரமே, சேவைக்குரிய ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்குரிய தகைமைகளை விண்ணப்பதாரிகள் கொண்டிருப்பதாகக் கருதப்படுவார்கள்.

4.0 வயதெல்லை:

விண்ணப்பங்களின் முடிவு திகதியன்று ஆகக்குறைந்த வயது 18 இற்குக் குறையாமலும், ஆகக்கூடிய வயது 30 இற்குக் கூடாமலும் இருத்தல் வேண்டும்.

5.0 வேலைக்குரிய நியதிகளும் சேவைக்குரிய நிபந்தனைகளும்.

5.1 உரிய பயிற்சிக் காலத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பின்னர், பயிற்சிக்குரிய வகுப்பிற்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள்,தொழில் ஆணையாளர் அதிபதி தீர்மானிக்கும் நிறுவனமொன்றால் நடாத்தப்படும் பரீட்சையொன்றுக்குத் தோற்றுதல் வேண்டும்.அப்பரீட்சையில் சித்தியடைந்ததாக அந்நிறுவனத்தால் வழங்கப்படும் சான்றிதழைச் சமர்ப்பிப்பதன் மீது, உரிய விண்ணப்பதாரி இச்சேவையின் வகுப்பு ஐஐஐ இற்கு உள்ளீர்க்கப்படுவார்.

5.2 மேற்படி பரீட்சையில் சித்திபெறத் தவறும் பயிற்சியாளர்களுக்கு மேலும் ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு பயிற்சிக்காலத்தை நீடிப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிற்சியாளரது சேவை முடிவுறுத்தப்படும்.

5..3 திறந்த போட்டிப் பரீட்சையின் முடிவுகளின்படி வகுப்பு ஐஐஐ இற்கான பதவி க்கு ஆட்சேரப்புச் செய்யப்படும் அலுவலர் 03 வருடங்களுக்கான தகுதிகூர் காலத்திற்கு உரியவராவார்.தகுதிகாண் காலத்தில் ஒதுக்கப்பட்ட கடமைகளை செய்து முடித்தல் மற்றும் ஒழுக்கத்தை பேணுதல் என்பன திருப்தியானது எனவும் மற்றும் அவர் 1 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைந்துமிருப்பின் மற்றும் அரசகரும மொழியில் தேர்ச்சியும் அடைந்திருப்பின் தகுதிகாண் காலம் முடிவடைந்ததன் பின்னர் அவரது பதவியானது நிரந்தரமாக்கப்படும்.

5.4 பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 18∴2020 மற்றும் அதனுடனான சுற்றறிக்கைகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கமைவாக,சேவைக்குச் சேரும் மொழிக்கு மேலதிகமான மற்றைய அரசகரும மொழியிலான தேர்ச்சி, பதவிக்கு நியமிக்கப்பட்டு 3 வருட காலத்தினுள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

5.5 இந்த நியமனமானது, பொதுச் சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், தாபனக் கோவையின் ஏற்பாடுகள் அவற்றுக்கு இனிமேல் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள்,நிதிப் பிரமாணங்கள், திணைக்களக் கட்டளைகள், 2015 செப்தெம்பர் 01 இல் 1930∴12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தொழில்நுட்ப சேவையின் சேவைப்பிரமாணக் குறிப்புகள், 2017-03-07 இல் பொதுச் சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டதும் 2018.03.20 இல் திருத்தப்பட்டதுமான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்படும் நியதிகளும் நிபந்தனைகளும், சேவைப் பிரமாணக் குறிப்பிலும் ஆட்சேர்ப்புத் திட்டத்திலும் இனிமேல் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் ஆகியவற்றுக்கு உட்பட்டதாக இருக்கும்.

5.6 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் கொழும்பு 05, நாராஹென்பிட்டியில் அமைந்துள்ள தொழிற் திணைக்களத் தலைமை அலுவலகத்திலேயே கடமையாற்றுதல் வேண்டும்.

6.0 சம்பள அளவுத்திட்டம்

6.16.1 பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 03∴2016 இன் அட்டவணை 1 இன் பிரகாரம்,இந்தப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம், ரூ. 31,040 - 10 x 445 – 11x 660 – 10 x 730 – 10 x 750 – ரூ. 57550/= ஆகும்.

6.2 பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 03∴2016 இன் பிரகாரம் பயிற்சிகுரிய வகுப்பிற்குரியவர்களுக்கான படி

1 ஆவது வருடம் - ரூ. 27,140∴ஸ்ரீ
2 ஆவது வருடம் - ரூ. 27,440∴ஸ்ரீ

7.0 எழுத்துப் பரீட்சை

(அ) எழுத்துப் பரீட்சையானது இரண்டு பாடங்களுக்கான வினாத் தாள்களைக் கொண்டிருக்கும். இப்பரீட்சை சிங்களம்,தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுவதுடன், விண்ணப்பிக்கும் மொழியானது பின்னர் மாற்றப்படுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

| பாடம் | கால அளவு | ஆகக்கூடிய புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | 01 ½ மணித்தியாலம் | 100 | 40 |

| | | | |
|---|---|---|---|
| 2. துறை சார்ந்த தொழில்நுட்பப் பரீட்சை | 02 மணித்தியாலம் | 100 | 40 |

(ஆ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இரண்டு பாடங்களுக்கும் தோற்றுதல் வேண்டும். எல்லாப் பரீட்சார்த்திகளும் நுண்ணறிவுப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், துறை சார்ந்த தொழில்நுட்பப் பரீட்சை, ஒவ்வொரு பரீட்சார்த்தியும் விண்ணப்பிக்கும் பதவிக்கு ஏற்ற வகையில் மாறுபடும். ஒவ்வொரு பதவிக்குமுரிய பரீட்சைப் பாடத்திட்டம் பந்தி 8.0 இல் தரப்பட்டுள்ளது.

(இ) நிரப்பப்படும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை, நியமனம் வழங்கப்படும் திகதி ஆகியன தொழில் ஆணையாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும்.

(ஈ)பல பரீட்சார்த்திகள் ஒரே அளவிலான மொத்தப் புள்ளிகளைப் பெற்றால், பொதுச் சேவை ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய தொழில் ஆணையாளர் நாயகத்தால் தீமானிக்கப்படும் என்பதுடன், இது தொடர்பில் இதுவே இதியான முடிபாகவும் இருக்கும்

8.0 எழுத்துப் பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்வருமாறு.

| வினாத்தாள் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை | இவ் வினாத்தாள் பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான அறிவார்ந்த விடயங்கள், பகுப்பாய்வுத் திறன்கள், தீர்மானம் எடுக்கும் திறன் ஆகியவற்றைத் தீர்மானிக்கும் வினாக்களைக் கொண்டிருக்கும். |
| 2. துறை சார்ந்த தொழில்நுட்பப் பரீட்சை | a) கைவிரலடையாளம் பரிசோதிக்கும் அலுவலர்<br>i. கைவிரலடையாளத் துறையின் வரலாறு<br>ii. கைவிரலடையாளத் துறையின் முன்னோடிகள்<br>iii. கைவிரலடையாளத்தைப் பதித்தலும் அதன் சிறப்பியல்புகளும்<br>iv. கைவிரலடையாளங்களைப் பெறுவதன் முக்கியத்துவம்<br>v. கைவிரலடையாளங்களின் அமைப்புகள்(யவவநசளெ).<br>vi. கைவிரலடையாளங்களைப் பெறுதல்<br>vii. ஆளொருவரது அடையாளத்தை உறுதிப்படுத்தும் முறைகள் (ஆநவாழனள)<br>viii. ஆவணங்களிலுள்ள பெருவிரலடையாளங்களை ஒப்பிட்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல். |

| | |
|---|---|
| | ix. நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கைவிரலடையாளங்களை ஒப்பிடும் முறை.<br>x. கைவிரலடையாளங்களின் அமைப்புகளும், அலை போன்ற சிறப்பியல்புகளும் (சனைபந உாயசயஉவநசளைவஉைள).<br>xi. கைவிரலடையாளங்களின் வகுப்பாக்கம்<br>xii. கைவிரலடையாளங்கள் தொடர்பான விதிகள் |
| | b) ஆராய்ச்சி உதவியாளர்<br>i. வேலையின் சூழல் அளவைகள், உயிரியல் அளவைகள், விஞ்ஞான ரீதியான அளவைகள் ஆகியவற்றை எடுப்பது பற்றிய அறிவு.<br>ii. வேலைச் சூழலின் பௌதிக அளவைகளை எடுக்கும் உபகரணங்கள் பற்றியஅறிவு<br>iii. இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் அவற்றின் நச்சுத்தன்மையும் ம் பற்றிய அறிவு.<br>iv. அதிர்வு,வெப்பம்,மின்னேற்றமடைதல் (ழைெணைைபெ)மின்னிறக்கமடைதல் (ழெ ழைெணைைபெ) கதிர்வீச்சு ஆகியவை பற்றிய அடிப்படையான அறிவு.<br>v. பகுப்பாய்வு முறைகளினூடாக இரசாயனப் பதார்த்தங்களை அடையாளங் காணுதல்<br>vi. ஆய்வுகூட உபகரணங்கள் பற்றிய அறிவு |
| | c) கட்டிடப் பரிசோதகர், தொழில்நுட்ப அலுவலர் (சிவில்)<br>i. கட்டிடங்களைக் கட்டுதல் மற்றும் பராமரித்தல் பற்றிய அறிவு<br>ii. அளவுகளைப் (ஙரயவெவைநைள) பெற்று,மதிப்பீடுகளைத் தயாரித்தல் ∴ அளவைகளை (அநயளரசநஅநவெள) எடுத்தலும் மட்டங்களை (டநளநடள) அளவிடுதலும் பற்றிய அறிவு |
| | d) தொழில்நுட்ப அலுவலர் (மின்னியல்)<br>e) மின்னியல் தொடுப்புகள் மற்றும் மின்சுற்றுக்கள் தொடர்பான அறிவு |

| | |
|---|---|
| | |
| | படவரைஞர்<br>i. மதிப்பீடுகளைத் திட்டமிடுதலும், மதிப்பீடுகளைத் தயாரித்தலும் பற்றிய அறிவு.<br>ii. கட்டிடத் தொழில்நுட்பம் பற்றிய வரைபுகள் குறித்த விளக்கமும், வரைதலும். |

9.0 பொதுவான நேர்முகப் பரீட்சை

பொதுவான நேர்முகப் பரீட்சை, தகைமைகளைப் பரிசோதிப்பதற்காக மாத்திரமே நடாத்தப்படும் என்பதுடன், புள்ளிகளேதும் வழங்கப்பட மாட்டாது.

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவது, நியமனம் வழங்கப்படுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக எடுத்துக்கொள்ளப்படலாகாது.

10.0 பரீட்சைக் கட்டணம்

பரீட்சைக் கட்டணமாக ரூ. 500.00 அறவிடப்படும். அது விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்பதாக, இலங்கை வங்கி, நாராஹேன்பிட்டி கிளையில் தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் கணக்கு இல 0071451995 இற்கு வரவிடத்தக்கதாக செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பதாரியின் பெயரில் பெறப்படும் வங்கி வைப்புச்சீட்டு விண்ணப்பப் படிவத்தல் குறித்த இடத்தில் இலகுவில் அகற்ற முடியாத வகையில் உறுதியாக ஒட்டப்படல் வேண்டும்.(பற்றுச்சீட்டின் புகைப்பட பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனமானதாக இருக்கலாம்)

குறிப்பு – மேலும், ஒரு முறை செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது இப்பரீட்சை இரத்துச் செய்யப்பட்டாலன்றி எக்காரணம் கொணடும் திருப்பப் பெற்றுக் கொள்ளப்பட முடியாது .மேலும் இப் பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம் இன்னொரு பரீட்சைக்குக்கட்டணமாகவும் மாற்றப்பட முடியாது.

11.0 விண்ணப்பிக்கும் முறை

11.1 இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தைப் பயன்படுத்தி, தமக்கான விண்ணப்பப் படிவத்தை விண்ணப்பதாரியே தயாரித்துக் கொள்ள வேண்டும். அது 21 ஓ 29 செ.மீ. (யு4) அளவு கடதாசிகளின் இரு பக்கங்களிலும், 1.0 – 8.0 ஆகியன முதற்பக்கத்திலும், 9.0 – 11.1 ஆகிய இரண்டாம் பக்கத்திலும், 11.2 – 12.0 ஆகியன மூன்றாம் பக்கத்திலும், 13.0 – 16.0 ஆகியன நான்காம்

பக்கத்திலும், 17.0 இல் உள்ளன ஆகியன ஐந்தாம் பக்கத்திலும் வரத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

11.2 விண்ணப்பப் படிவங்கள் விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே தயாரிக்கப்பட வேண்டும்.

11.3 மாதிரி விண்ணப்பத்துடன் ஒத்திராத மற்றும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் எவ்வித முன்றிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

11.4 இப்பரீட்சையானது கொழும்பீல் அமைக்கப்படும் பரீட்சை மண்டபங்களில் மாத்திரம் 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நடைபெறும்.

11.5 விண்ணப்பப் படிவம் கிடைத்தமையிட்டு எவ்வித அறிவித்தலும் வழங்கப்பட மாட்டாது. தபாலில் காணாமற்போகும் விண்ணப்பங்கள் தொடர்பான முறைப்பாடு ஏதும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

11.6 பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படுதலானது, விண்ணப்பதாரி பதவிக்குரிய தகைமைகளைக் கொண்டுள்ளார் எனக் கருதப்படுவதாகக் கொள்ளப்படலாகாது.

11.7 ‘‘தொழில் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவையின் ............................... பதவிக்கு ஆட்சேர்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை’’ என, விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட வேண்டும். இதில் விண்ணப்பதாரி விண்ணப்பிக்கும் பதவிப் பெயர் இதிலுள்ள இடைவெளியில் சேர்க்கப்பட வேண்டும்.

11.8 விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், ஒரு பாடசாலை அதிபரால், அல்லது ஒரு சமாதான நீதிவானால், அல்லதுபிரசித்த நொத்தாரிசு ஒருவரால், அல்லது முப்படைகளின் ஆணையிடும் அதிகாரி ஒருவரால், அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானி மூலம் பெயரிடப்பட்ட அதிகாரி ஒருவரால், அல்லது 6.∴2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்கத்தில் நிரந்தரமான மூன்றாம் நிலை அல்லது சிரேட்ட பதவி வகிக்கும் அலுவலர் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

11.9 பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்பும், அல்லது நிரப்பாமல் விடும், அல்லது அவற்றில் ஒரு பகுதியை மாத்திரம் நிரப்பும் தீர்மானத்தையும், இது தொடர்பான மற்றைய எல்லா விடயங்களையும் பற்றிய தீமானங்களையும் எடுப்பதற்கான இறுதி அதிகாரம் தொழில் ஆணையாளர் நாயகத்திற்கே உள்ளது.

12.0 விண்ணப்பங்களை அனுப்புதல்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பமானது பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு 2021 ஒகத்து மாதம் 13 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பப்பட வேண்டும்.

பணிப்பாளர் நாயகம்,
தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகம்,
இரண்டாம் தளம்,
தொழிற் செயலகம்,
கொழும்பு - 05.

13.0 பரீட்சைக்குத் தோற்றுதல்

(அ) தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி, எல்லா வகையிலும் பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பும் விண்ணப்பதாரிகளுக்கு, பரீட்சை நடைபெறவுள்ள 2021 செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதிக்கு ஒரு கிழமைக்கு முன்பாக பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்குவார். தனது அனுமதிப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

(ஆ) பரீட்சார்த்தியொருவர் தனக்குரிய பரீட்சை மண்டபத்தில் உரிய சுட்டெண்ணின் கீழ் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். அவ்வாறு பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தனது அனுமதி அட்டையை,அதில் தனது சான்றுப்படுத்தப்பட்ட கையொப்பத்துடன், பரீட்சை நடைபெறும் தினத்தன்று பரீட்சை மண்டப பிரதான மேற்பார்வையாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

(இ)அனுமதி அட்டைகள் பரீட்சை நடைபெறும் தினமான 2021.09.26 ஆந் திகதியிலிருந்து ஒரு கிழமைக்கு முன்னர் அனுமதி அட்டைகிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் 0112786541 அல்லது 0112786542 என்ற தொலைபேசி ஊடாக தேசிய தொழிற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர்அதிபதி அவர்களுக்குத் தெரியப்படுத்துதல் வேண்டும். உங்களிடமிருக்கும் பணம் செலுத்திய வங்கிக் கணக்குக் கூற்று மற்றும் பதிவுத் தபால் பற்றுச் சீட்டு மற்றும் விண்ணப்ப படிவம் ஆகியவற்றின் சான்றுப்படுத்திய பிரதிகளுடன் தேசிய தொழிற்கற்கைகள் நிறுவகத்துடன் தொடர்பு கொள்ளுதல் மிகவும் பயனுடையதாகும்.

14.0 பரீட்சார்த்தியின் ஆளடையாளம்

பரீட்சை மண்டபத்தில் பரீட்சை மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்தும் வகையில் பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், தமது ஆளடையாளத்தை நிரூபிக்கும் வகையில், பின்வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ)ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை
(ஆ)செல்லுபடியாகும் கடவுச்சீட்டு
(இ) செல்லுபடியாகும் வாகன அனுமதிப்பத்திரம்

15.0 பொய்யான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கான தண்டனை

பரீட்சார்த்தியொருவர் தகுதியற்றவரெனக் காணப்பட்டால்,பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அவரது தகைமை, பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னரோ,அல்லது பரீட்சை எழுதும்போதோ, அல்லது பரீட்சைக்குப் பின்னரோ இரத்துச் செய்யப்பட இடமுண்டு.

மேலும்,தெரிந்துகொண்டே பொய்யான தகவல்களைச் சமர்ப்பிக்கும் அல்லது வேண்டுமென்றே ஏதேனும் தகவலை மறைக்கும் விண்ணப்பதாரி, பின்னர் சேவையிலிருந்து பதவிநீக்கத்துக்கு ஆளாக நேரிடலாம்.

16.0 இந்த அறிவித்தலில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் ஏதேனும் மா்றுபாடுகள் காணப்படின், சிங்கள மொழியிலான அறிவித்தலே கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

**தொழில் ஆணையாளர் நாயகம்**

தொழில் திணைக்களம்

கொழும்பு - 05

2021……......... மாதம் ......ஆம் திகதி

மாதிரி விண்ணப்பப் படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

**தொழில் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர - தொழில்நுட்ப சேவை வகையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2021**

01. மொழி –நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்:
சிங்களம் - 1 ☐ (உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதுக)
தமிழ் - 2
ஆங்கிலம் - 3

நீங்கள் பரீட்சைக்குத் தோற்றும் மொழியிலேயே விண்ணப்பப் படிவம் நிரப்பப்பட வேண்டும்.

2.0

2.1. முதலெழுத்துக்களுடன் பெயர் (முடிவினில்வருமாறு):
..............................................................................

(ஆங்கில பெரிய எழுத்தில்) உ-ம்: (SILVA A.B.D.P.A)

2.2.முழுப் பெயர்: ....................................................................................................................

(ஆங்கில பெரிய எழுத்தில்)

2.3. முழுப் பெயர்: ....................................................................................................................

(சிங்களத்தில் ∴ தமிழில்)

03.3.1.நிரந்தர முகவரி:(ஆங்கில பெரிய எழுத்தில்) (அனுமதி அட்டை இம்முகவரிகே அனுப்பி வைக்கப்படும்)

..................................................................................................................................................

....................................................................................................................................

3.2. நிரந்தர முகவரி: (சிங்களத்தில் ∴ தமிழில்)

..................................................................................................................................................

....................................................................................................................................

.

04. பால் : (ஆண் -0 , பெண் -1)

(உரிய இலக்கத்தைப் பெட்டியினுள் இடுக) ☐

05. தே. அ. அ. இல. : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

06. விவாக நிலை : (விவாகமாகாதவர்- 1 , விவாகமானவர் -2) ☐

.

07. 7.1 பிறந்த திகதி

வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ நாள் ☐☐

7.2 வயது: விண்ணப்ப முடிவுத் திகதி 13/08/2021 இல் வயது:

வருடம் ☐☐☐☐☐ மாதம் ☐☐ நாள் ☐☐

08. தொலைபேசி இல ☐☐☐☐☐☐☐☐☐☐

09. விண்ணப்பிக்கும் பதவி (உரிய இடத்தில்✓என குறிப்பிடுக)

| இல. | பதவி | |
|---|---|---|
| 1 | ஐகவிரலடையாளம் பரிசோதிக்கும் அலுவலர் | |
| 2 | ஆராய்ச்சி உதவியாளர் | |
| 3 | கட்டிடப் பரிசோதகர் | |
| 4 | படவரைஞர் | |
| 5 | தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) | |
| 6 | தொழில்நுட்ப அலுவலர் (மின்னியல்) | |

10. வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 3.0 இன் பிரகாரம் விண்ணப்பிக்கும் வகுப்பு. (உரிய இடத்தில்✓என குறிப்பிடுக)

| | | |
|---|---|---|
| 1 | பயிற்சிக்குரிய வகுப்பு (இரண்டு வருட பயிற்சிக்காலம்) | |
| 2 | பயிற்சிக்குரிய வகுப்பு (ஒரு வருட பயிற்சிக்காலம்) | |
| 3 | வகுப்பு ஐஐஐ (நேரடி ஆட்சேர்ப்பு) | |

11. கல்வித் தகைமைகள்:

11.1 க.பொ.த. (சா.த.) பரீட்சை: (முதலாந்தடவை)

(ை) பரீட்சையின் வருடமும் மாதமும்: ..................................................................

(ைை)சுட்டிலக்கம்: ....................................................

(ைைை)பெறுபேறுகள்:

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

11.2 க.பொ.த. (சா.த.) பரீட்சை: ( இரண்டாந்தடவை)

(ை) பரீட்சையின் வருடமும் மாதமும்: ..................................................................

(ைை) சுட்டிலக்கம்: ................................................

(ைைை) பெறுபேறுகள்:

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | |
| 2 | | | 7 | | |
| 3 | | | 8 | | |
| 4 | | | 9 | | |
| 5 | | | 10 | | |

11.3 க.பொ.த. (உ.த.) பரீட்சை:

(i) பரீட்சையின் வருடமும் மாதமும்: .....................................................

...........

(ii) சுட்டிலக்கம்: ......................................

(iii) பெறுபேறுகள்:

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

12. வாண்மைத்துவத் தகைமைகள்:

| பயிற்சிநெறி | சான்றிதழ் வழங்கிய நிறுவனம் | பயிற்சிநெறியின் காலம் | சான்றிதழின் இலக்கமும், செல்லுபடியாகும் திகதியும் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

13. குற்றவியல் குற்றச்சாட்டிற்காக எப்போதாவது நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டீர்களா?: ............

அவ்வாறாயின், விபரங்களைத் தருக: ...............................................................

--

14. முன்பு எப்போதாவது உங்களது அரச சேவை முடிவுறுத்தப்பட்டதா?..........

............

அவ்வாறாயின், விபரங்களையும் முடிவுறுத்தப்பட்டமைக்கான காரணங்களையும் தருக: ................

15. பரீட்சைக் கட்டணம்:-

15.1 செலுத்திய தொகை: ....................................

15.2 பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கிக் கிளையின் பெயர்.'..:..........

...........

15.3 செலுத்திய திகதி:..........................................

15.4 பற்றுச்சீட்டு இல:................................................

| |
|---|
| பரீட்சைக்கட்டணம் செலுத்திய வங்கி வைப்புச் சீட்டினை உறுதியாக ஒட்டவும்<br>(அதன் நிழல் பிரதி ஒன்றைத் வைத்திருத்தல் |

16. விண்ணப்பதாரியின் சான்றிதழ்:

வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விதிகள், விதிமுறைகளின் பிரகாரம் இந்த, திறந்த பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமைகளை ……………………………………..ஆகிய நான் கொண்டிருக்கிறேன் எனவும், இந்த விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரை உண்மையானவை எனவும் நான் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன். மேலும், இப் பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்படுவதற்கு நான் சம்மதிக்கிறேன். அவ்வாறே,இப் பரீட்சைக்குரிய ஏற்பாடுகளைக் கொண்டுள்ள ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம், நான் தகுதியற்றவரெனக் காணப்பட்டால்,இப் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின்போதோ, அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சைக்கான தகைமையை நான் இழக்கச் செய்வதற்கு எடுக்கப்படத்தக்க முடிவை, எவ்வித நட்டஈடுமின்றி ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறேன். மேலும், இப்பரீட்சையை நடாத்துவதிலும் இதன் பெறுபேறுகளை வெளியிடுவதிலும் தொழில் ஆணையாளர் அதிபதியால் வழங்கப்படும் விதிமுறைகளுக்கு உட்படுவேன் என்பதையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். மேலும், நான் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால்,நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்குச் சம்மதிக்கிறேன்.

.................... ................................

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

17. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் (வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 11.8) இன் பிரகாரம்)

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு.:.திருமதி.:.செல்வி ...............................................................(விண்ணப்பதாரியின் முழுப்பெயர்)எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும், அவர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை இதில் ஒட்டியுள்ளார் எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறேன். அவர் தனது கையொப்பத்தை என் முன்னிலையில் ....................... ஆம் திகதியன்று இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்

திகதி: ............................. ...................................................

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை
உறுதிப்படுத்துபவரது கையொப்பம்

விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரது முழுப் பெயர் :-

பதவி :-

முகவரி :-

( அலுவலக பதவி முத்திரை இடப்பட்டு உறுதிப்படத்தப்பட வேண்டும்)